இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

லேவியர் குலத்தைச் சார்ந்த குருக்கள் சாவுக்கு ஆளானவர்களாய் இருந்ததால் தம் பணியில் நிலைத்திருக்க முடியவில்லை. வேறு பலர் தொடர்ந்து குருக்களாயினர். இவரோ, என்றென்றும் நிலைத்திருப்பதால், மாறாத குருத்துவப் பணியைப் பெற்றுள்ளார். ஆதலின், தம் வழியாகக் கடவுளிடம் வருபவரை அவர் முற்றும் மீட்க வல்லவராய் இருக்கிறார்; அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே உயிர் வாழ்கிறார். இத்தகைய தலைமைக் குருவே நமக்கு ஏற்றவராகிறார். இவர் தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர். (எபி 7:23-25)



# கிறிஸ்தவர்களும் இந்துக்களும்: இத்துன்ப நெருக்கடி காலத்தில் மக்கள் வாழ்வில் ஒன்றித்து ஒளி தீபம் ஏற்றுவோம்!

## 2021 தீபாவளி பெருநாளை முன்னிட்டு வத்திக்கான் வழங்கும் செய்தி

அன்புள்ள இந்து நண்பர்களே,

இந்த ஆண்டு நவம்பர் 4 ஆம் தேதி வரும் தீபாவளி திருநாளில், சமயங்களுக்கு இடையிலான உரையாடலுக்கான திருஆட்சிப்பீட மன்றம் தனது அன்பான வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது. தற்போதைய தொற்றுநோய் மற்றும் அதன் விளைவாக உலகளாவிய நெருக்கடிகள் ஆகியவற்றிலிருந்து எழும் கவலை மற்றும் நிச்சயமற்ற நிலையிலும் கூட, இந்த பெருநாளைக் கொண்டாடுவது, சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடன் உங்கள் வாழ்க்கையையும், இல்லங்களையும், சமூகங்களையும் ஒளிரச் செய்யட்டும்.

மக்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் சீரழித்த தொற்றுநோயின் முதல் மற்றும் இரண்டாவது அலைகள் நம் மனதில் புதிதாக பதிந்துள்ள வடுக்களைத் தவிர, ஏதோ ஒரு வகையில், நம் அனைவரிடமும் வெவ்வேறு அளவுகளிலான தளர்ச்சி ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதத்தோடு சுற்றுச்சூழல் சீரழிவும் உலகம் முழுவதும் அழிவுக்கான அநீதிகள் நிகழும் போதெல்லாம் விரக்தியான அவநம்பிக்கை எழுகிறது. இவை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் துயரத்தையும் விரக்தியையும் அதிகரிக்கின்றன. இந்தச் சூழலில், இதுபோன்ற சவாலான காலங்களில், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் ஆகிய இருவருமே எப்படி மக்களின் வாழ்வில் நம்பிக்கையின் ஒளியைக் கொண்டு வர முடியும் என்பது பற்றிய சில கருத்துக்களை - நமது அன்பிற்குரிய பாரம்பரியத்தின்படி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

மக்களுக்கு அளவிட முடியாத துன்பத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கும் தற்போதைய தொற்றுநோயின் கருமேகங்களுக்கு மத்தியில் ஒற்றுமை



மற்றும் சகோதரத்துவத்தின் நம்பிக்கை ரேகைகள் உள்ளன. நாம் 'ஒன்றித்து இருக்க' இயலும் என்பதையும், ஒவ்வொரு நெருக்கடியையும் உறுதியுடன் சமாளிக்கக் கூடிய திறன்களும் நம்மில் உள்ளது. குறிப்பாக, சமயங்களுக்கிடையிலான ஒற்றுமையின் மூலம் மக்களின் வாழ்வில் ஒளியை கொணரக் கூடிய சமய மரபுகளின் பயனையும் வளத்தையும் நாம் கொண்டுள்ளோம்.

இத்துன்பக் காலத்தில் ஒருவர் ஒருவருக்கிடையில் வளர்ந்து வரும் விழிப்புணர்வின் அடிப்படையில், நாம் நம்மிலுள்ள நம்பிக்கையின் ஒளியைக் வெளிக் கொணர்வதற்கான வழிகளை மேலும் மேலும் கண்டறிய வேண்டும். கருத்து வேறுபாடுகள், பிளவு, பேரழிவு, இழப்பு மற்றும் மனிதாபிமானமற்ற தன்மை ஆகியவை களையப்பட்டு, நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதர சகோதரிகள் என்று எண்ணம் நம்மிடையே அதிக விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டுமே, ( Pope Francis, Encyclical Letter Fratelli Tutti- On Fraternity and Social Friendship, 3 October 2020) நமது 'பொது இல்லமான' இந்த பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பை பகிர முடியும். அத்தோடு, ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பதன் மூலமும், மற்றவர்களுடன் ஒன்றித்துச் செயல்படுவதன் மூலமும், ஒவ்வொரு நெருக்கடியிலிருந்தும் சிறப்பாக நம்மால் வெளிவர இயலும்.

சமய மற்றும் சமூகத் தலைவர்களுடனும், பிற சமய மரபைச் சேர்ந்தவர்களுடனும் நெருக்கடிகள் மற்றும் பேரிடர்களின் போது, அனைவரோடும் சேர்ந்து பயணிப்பதும், பணியாற்றுவதும் சகோதரத்துவ அடிப்படையில் இன்றியமையாதது.

சமயங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் பொறுப்பாக செயல்படுவது நம்மிடையே ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை வலுப்படுத்துவதற்கு ஓர் உறுதியான வழிமுறையாகும். மேலும் இத்தகைய ஆழ்ந்த நல்லுறவானது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவையும், துன்பப்பட்டவர்களுக்கு நம்பிக்கையையும் கொண்டு வரும் என்பது திண்ணம்.

நமது சொந்த சமய மரபுகளில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், மனித குலத்தின் மீது, குறிப்பாக துன்புறும் மனித குலத்தின் மீது அக்கறை கொண்டவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும், இந்துக்களாகவும், தனிநபர்களாகவும், கூட்டாகவும், பிற சமய மரபுகளுடனும் மற்றும் நல்லவர்களுடன் கைகோர்ப்போம். துன்புறும் மக்களை நாடிச் சென்று, அவர்களின் வாழ்வில் ஒளி தீபம் ஏற்றுவோம்.

**அனைவருக்கும் எங்களது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.**

Miguel Amgel Cardinal Ayuso Guixott, MCCJ

Rev. Msgr. Indunil Kodithuwakku Janakaratne Kankanamalage

# கூலிம், திருஇருதய ஆண்டவர் பங்கில் விவிலியக் கதை சொல்லும் போட்டி நடைபெற்றது

**பினாங்கு:** கடந்த அக்டோபர் 8,15,22 ஆம் தேதிகளில் தொடர்ந்து மூன்று வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு கூலிம் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் படிவம் 1-5 பயிலும் 20 மாணவர்களுக்கு திருவிவிலியத் தில் சிறிய இறைவாக்கினர்கள் மற்றும் நீதி தலைவர்களை பற்றிய கதை சொல்லும் போட்டி இயங்கலை வழியாக நடைபெற்றது. ஒவ்வொருவரின் படைப்பிலும் அவர்களின் தனித்திறமைகள் வெளிப்பட்டன.

இந்த கோவிட் காலத்தில் மறைக்கல்வி மாணவர்களை உற்சாகப்படுத்தவும் திருவிவிலியத்தை ஆழமாக கற்றறியும் நோக்கத்திற்காக பங்கின் உருவாக்கப்பயிற்சி குழு தலைவர் சகோதரர் லீனஸ், மற்றும் சகோதரர் ஜோன்சன், சகோதரிகள் சேரன் சைமன், மரியா குழுவினரின் முயற்சியாலும், பங்குத்தந்தை Msgr. தந்தை ஹென்றி ராஜூ அவர்களின் ஒத்துழைப்பாலும் மறைக்கல்வி ஆசிரியர்களின் ஊக்குவிப் பாலும் பெற்றோர், பங்கு மக்கள் ஆதரவாலும் மிகவும் சிறப்பாக நடைப்பெற்றது. இணையத்தின் வழி புதிய யுக்திகளை பயன்படுத்தி சிலிம் ரீவரைச் சேர்ந்த சகோதரி சலோமி சைமன், ஈப்போ சிலிபினைச் சேர்ந்த சகோதரர் தோமஸ் சின்னையா







இருவரும் நீதிபதியாகவும் மற்றும் சிலிம் ரீவரை சேர்ந்த சகோதரி சூசன் சைமன் ஒவ்வொரு கதைக்கு பின் அதனை ஒட்டி ஐந்து கேள்விகளும் அதற்கான பதில்களை இயங்கலை வாயிலாக மாணவர்கள் அவருக்கு அனுப்பவும் இந்நிகழ்ச்சியை சிறப்பாக வழி நடத்தினார்.

அறிவிப்பாளர் சகோதரர் சந்தானா மற்றும் முன்னாள் மறைக்கல்வி மாணவர்கள் சேனன், ஜேஸ்தீன், ரோய் அவர்களின் சாட்சியமும் இசையும் இந்நிகழ்வுக்கு மெருகூட்டியது.

*ஜேன் சந்தனசாமி, கூலிம்.*

## நினைவில் கொள்வோம்!

**16-வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான ஆய்வுகள்**

- சந்தித்தல்
- செவிமடுத்தல்
- தெளிந்து தேர்தல்

**ஆகிய முப்பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.**



# மரண தண்டனை ரத்து செய்ய வேண்டும்

## கி. சீலதாஸ்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

குற்றவியல் சட்டம் அல்லது வேறு பல குற்ற நடவடிக்கைகளைச் செய்தவர்களுக்கு மரண தண்டனை கூடாது என்கிறார்கள். இந்த இயக்கத்தை முன்நின்று நடத்துபவர்கள் மரண தண்டனைக்கு உட்பட்டவர்களின் குடும்பத்தாரின் கடும் வேதனைகளைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் மீது பரிதாப அலை மோதச்செய்வது இயல்பாகிவிட்டது. அதே சமயத்தில், நிரபராதியான ஒருவரைக் கொல்லப்பட்டவரின் குடும்பம் படும் அவலத்தை யாராவது பேசுகிறார்களா? கிடையாது! பெருமளவில் போதைப் பொருள் கொள்முதல் செய்வோரின் செயல் சமுதாயத்தையே பாதிக்கிறதே, சமுதாயமே அவதிப்படுகிறதே. அதைக் கவனிப்பவர்கள் யார்? இந்த இரண்டு வித்தியாசமான கருத்துக்கள் இருப்பதையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். எனவே, மரண தண்டனை வேண்டாம் என்பவர்கள் அந்தக் கொலையில் பலியானவர்களைப் பற்றி, அவர்களின் குடும்பத்தைப் பற்றி கரிசனம் காட்டாதது ஏற்புடையதா? அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவரின் குடும்பத்தின் அவதி அரசியல் கோட்பாடுகளை வலியுறுத்துபவர்கள், சமயத்தைப் போற்றுபவர்கள் அனைவரும் வன்முறையை, மரணத்தை விளைவிக்கும் எல்லா நடவடிக்கைகளையும் புறக்கணிக்க வேண்டும், துறக்க வேண்டும், தடைசெய்ய வேண்டும். அப்படியானால் அரசியல், சமயக் கோட்பாட்டின் பெயரில் மரணம் விளைவிப்பதை ஐநா தடைசெய்ய வேண்டும்.

விஞ்ஞானம் அஞ்ஞான இருளை நீக்கும் போது மனிதன் சமமானவன். அவனுக்கு மனிதநேயத்தின் மீது நம்பிக்கையும், மதிப்பும் மேலிட்டு அவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்கினான். இப்படிப் பட்ட முன்னேற்ற பாதையில் நகரும்போது பழைய அடக்குமுறை சட்டங்களும், வழிமுறைகளும், மரபுகளும் மனிதநேயத் துக்குக் கட்டுப்பட வேண்டுமென்ற கருத்து மேலோங்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. அந்த மனிதநேய அணுகுமுறையில் ஒன்றுதான் மரண தண்டனையைத் துறக்க வேண்டும் என்கின்ற இயக்கம். இந்த அணுகுமுறை சமயவாதிகளாலும் அரசியல் வாதிகளாலும் எப்படி காணப்படுகிறது? அதுதான் முக்கியம்!

கொலை செய்யப்பட்டவர், அவரின்



பெரிதா என்ற விவாதம் எப்பொழுதும் இருக்கும். பொதுவாக, மரண தண்டனையை அகற்றிவிட வேண்டுமென்று வலியுறுத்திய ஒரு அரசியல் தலைவர் அடுத்து நிகழ்ந்த ஒரு பயங்கர கொலையை அறிந்ததும் இதுபோன்ற கொடூர கொலைகளுக்கு மரண தண்டனை விதிக்கலாம் என்றார். அப்படியானால் கொல்லப்படும் முறையைப் பொருத்து மரண தண்டனை விதிப்பதா என்று கேட்கத் தோன்றும் அல்லவா?

மரண தண்டனை என்றால் உயிர் பறிப்பு என்று பொருள்படும். உலக நாடுகள், குடும்பம் படும் அவதி ஒருபுறம்; கொலை செய்தார் என்ற குற்றத்தில் தண்டிக் கப்பட்டவரின் குடும்பத்தின் அவலம் ஒருபுறம். இரண்டுமே வேதனை தருகிறது. ஆனால், அதில் எவரின் அவலத்தின் கொடுமை மிகுந்திருக்கும் என்ற ஆய்வு நியாயமானதாகத் தெரியவில்லை. மரண தண்டனை வேண்டாம் என்பது ஒரு அரசியல் கோரிக்கையாக மாறிவிட்டது. மனித நேயத்துடன் பார்க்கும்போது இயற்கை மரணம் ஒன்றைத் தவிர எல்லாவிதமான உயிரைப் பறிக்கும் குணம் தடைசெய்வது நியாயமே!

# மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட 30-வது தமிழ் அருங்கொடை எழுச்சி கூட்டம் நடைபெற்றது

**ஜொகூர்:** மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட 30-வது தமிழ் அருங்கொடை எழுச்சிக் கூட்டம் அக்டோபர் மாதம் 19ம் தேதி (பொது விடுமுறை) செவ்வாய் காலை 11 மணி முதல் பகல் 2.30 மணி வரை இயங்கலை வழி சிறப்பாக நடைபெற்றது. Zoom செயலி வழியாக சுமார் 250 குடும்ப உறுப்பினர்களும் நேரலை youtube காணொளி வழியாக சுமார் 150 குடும்ப உறுப்பினர்கள் என மலேசியா அருங்கொடை வரலாற்றில் இயங்கலை வழி நடைபெற்ற மாபெரும் நிகழ்வாக திகழ்ந்தது. குறிப்பாக தீபகற்ப மலேசியாவின் மூன்று மறைமாவட்ட கத்தோலிக்க நம்பிக்கையாளர்களுடன் சபா, சரவாக், சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிலிருந்தும்



இறைமக்கள் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மறைமாவட்ட கருப்பொருளான “எதிர் நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்” இந்த எழுச்சிக் கூட்டத்தின் முக்கிய கருப்பொருளாக அமைந்தது. மறைமாவட்ட ஆயர் மேதகு பெர்னார்ட் பவுல் சார்பாக பேரருட்தந்தை மைக்கல் அவர்கள் அதிகாரபூர்வமாக தொடங்கி வைத்தார். இந்த தொடக்க நிகழ்வில் விவிலிய ஆராதனையும் நம் பாரம்பரிய பரதநாட்டிய நடனமும் இடம் பெற்றது.

எழுச்சிக்கூட்டத்தின் முதல் பகிர்வை சிபு (சரவாக்) மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணி. குழந்தைசெல்வன் அவர்கள் **‘பெறுவோம் பகிர்வோம்’** என்ற கருப்



பொருளில் சொற்பொழிவாற்றினார். நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாகப் பினாங்கு மறைமாவட்ட ஆயர் மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் எதிர் நோக்குதலின் மக்கள் என்ற கருப்பொருளில் நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு என்ற காரணிகளை கொண்ட மறைபரப்பு சீடர்களாக திகழ வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்த பகிர்வுகளைத் தொடர்ந்து “இக்காலமும் கடந்து போகும்” என்ற கருப்பொருளுடன் குணமளிப்பு இறைவேண்டலானது ஜாசின், தூய ஆவியானவர் பங்கின் பங்குத்தந்தை அருள் பணி. தேவதாசன் மதலமுத்து, அவர்களால் சிறப்பாக வழிநடத்தப்பட்டது.

திருத்தொண்டர் ஒஃபிக் ஜோசப் அவர்கள் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருங்கொடை புகழ் ஆராதனைகளும், தூய ஆவியார் பாடல்களும், இறைவேண்டலும் இடம்பெற்றன. மறைமாவட்ட அருங்கொடை மறுமலர்ச்சி ஆன்மீக குழு பொறுப்பாளர் அருள்பணி. கிறிஸ்டோபர் லீ அவர்களின் உரையுடன் அருள்பணி. தேவா அவர்களின் நிறைவு ஆசிருடன் எழுச்சிக் கூட்டம் சிறப்பாக நிறைவுற்றது.

*-த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*

## 16-வது ஆயர் மாமன்றம் சிந்தனைக்கு

இந்த மூன்றாண்டு பயணத்திலே தூர நோக்குள்ள மனநிலையைத் திருஅவை கொண்டிருக்க வேண்டும் என்று திருத்தந்தை எதிர்பாக்கின்றார். திரு அவையின் இந்தக் ஒன்றித்தப் பயணம்,

- உரையாடுவதிலும், செவிமடுப்பதிலும், பகிர்வு மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.
- அதிகமாக, செவிமடுக்கப்பட விரும்பும் இந்த உலகில், செவிமடுப்பதில் தாழ்ச்சி இருக்க வேண்டும். நம் உரையாடல்கள் இறந்துபோன பழைமை வாதத்திற்குத் தூபம் போடாமல், கிறிஸ்துவில் புதுமைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.
- ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் மனமாற்றம் என்ற விதையை விதைக்க வேண்டும்.
- பிழையான முற்சார்பு எண்ணங்கள் விலக்கப்படவேண்டும்.
- அருள் நிலைக்கு அழைக்கப்பட்டவர்களால் இழைக்கப்படுகின்ற தீமைகள் அறியப்பட்டு, அவை எதிர்காலத்தில் நடை பெறாவண்ணம் திருஅவை அமைக்கப்படவேண்டும்.
- நான் மட்டுமல்ல மாறாக அனைவரும் என்ற தொனி அனைத்து உள்ளத்திலும் ஒலிக்க வேண்டும்.

# பிறரில் துன்புறும் கிறிஸ்துவைக் காண்போம்!

இன்று ஆண்டின் பொநதுகாலத்தின் 31-ம் ஞாயிறின் இறைவார்த்தைகளை தியானிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

நற்செய்தி வாசகத்தில் மறைநூல் அறிஞர் ஒருவர் இயேசுவிடம் வந்து, “அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?” என்று கேட்கின்றார். அவர் இயேசுவிடம் இவ்வாறு கேட்பதன் நோக்கம் இயேசுவைச் சோதிக்க வேண்டும் என்பது கிடையாது. மாறாக, இயேசுவை பொறுத்தளவில் எது முதன்மையான கட்டளை என்பதை அறிந்து கொள்ளவே அவர் இப்படிக் கேட்கின்றார்.

இயேசு அவருக்கு இணைச்சட்ட நூல் 6 ஆம் அதிகாரம் 4,5 வசனங்களையும் லேவியர் புத்தகம் 19 ஆம் அதிகாரம் 18 ஆம் வசனத்தையும் இணைத்து, ‘நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக’ என்பது முதன்மையான கட்டளை. உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக’ என்பது இரண்டாவது கட்டளை இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை” என்கின்றார். அதாவது இறையன்பும் பிறரன்பும்தான் முதன்மையான கட்டளை என்று இயேசு அந்த மறைநூல் அறிஞருக்கு மிக அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றார்.

யூதர்கள் கடவுளை அன்பு செய்வதுதான் முதன்மையான கட்டளை என்று நினைத்து வந்தார்கள். அதனாலேயே அவர்கள் பலிகளை ஒப்புக்கொடுப்பது, ஓய்வுநாள் சட்டங்களைக் கடைபிடிப்பது என்று அவற்றில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். ஆனால், அவர்கள் சக மனிதர்களை அன்பு செய்வதற்குத் தவறினார்கள். ஆண்டவர் இயேசுவோ கடவுளை எப்படி அன்பு செய்கின்றோமோ அந்த அளவுக்கு சக மனிதர்களை அன்பு செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றார். இவ்வாறு இயேசு சொன்னது மட்டுமல்லாமல், சொன்னதை வாழ்ந்து காட்டவும் அழைப்பு விடுத்தார்.

இன்றைய முதல்வாசகத்தில், நீங்களும் உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லா நியமங்களையும் கட்டளைகளையும் உங்கள் வாழ்நாளெல்லாம் கடைப்பிடிப்பீர்களாக! இதனால், நீங்கள் நெடுநாள் வாழ்வீர்கள் என்ற வாக்குறுதியை அளிக்கிறார் கடவுள். அவரால் அழைக்கப்பட்டவர்களாகிய நாம் எப்படி பிறரை அன்பு செய்வது என்ற கேள்விக்கு புனித அன்னை திரேசா நல்ல பதிலாக வருகிறார்.

அழுக்கிய நாற்றமெடுத்த தொழுநோயாளியின் புண்களையே கழுவித் துடைத்து கொண்டிருந்த அன்னை தெரெசாவைப் பார்த்து ஒருவன் கேட்டான், அம்மா! நான் 10000 ரூபாய் கொடுத்தாலும் இதைச் செய்ய மாட்டேன். உங்களால் இதைச் செய்ய எவ்வாறு முடிந்தது என்றான். அன்னை 'துன்புறும் கிறிஸ்துவையல்லவா இவனிடத்தில் நான் காண்கிறேன்' என்றார். ஆம் இந்த அன்பைத்தான் நம் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். சுயநலத்தைத் துறந்து பொதுநலத்தை நாடினால் நம்மில் பிறர் அன்பு தானாக ஊற்றெடுக்கும். இறை அன்பு இல்லாத பிறர் அன்பு வேரற்ற மரம், பிறர் அன்பு இல்லாத இறை அன்பு கனிகொடாத மரம். வேர் கொண்ட மரமாக இறை அன்பில் நிலைத்திருப்போம், கனிகொடும் மரமாக பிறர் அன்பில் என்றும் மூழ்கியிருப்போம். கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருகிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார் என்பதை நினைவில் கொளவோம் (1 யோவா 4:1).

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**பொதுக்காலம் 31-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | இ.ச. 6:2-6 |
| தி. பாடல்: | 18:1-2abc,2def-3. 46,50a |
| 2ம் வாசகம்: | எபி. 7: 23-28 |
| நற்செய்தி: | மாற்கு 12: 28b-34 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 3**